அ.வ.எண். 8/2015 நாள்: 17.03.2026

பி.சா.1 திரு. ராமதாஸ்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

6.வாதி கணவர் எந்த வருடம் இறந்துபோனார் என்றால் 1973-ல் இறந்தார். வாதிக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1971-ல் திருமணம் ஆனது. வாதியின் கணவர் எங்கு வேலை செய்தார் என்று தெரியுமா என்றால் தும்பா ராக்கேட் ஏவுதளத்தில் வேலை செய்தார். தும்பா ராக்கேட் ஏவுதளமும் விக்ரம் சாராபாய் வின்வெளி ஆராய்ச்சி மையமும் ஒன்றுதான் என்றால் சரிதான். வாதியின் கணவர் பணியில் இருந்தபோது இறந்துபோனார் என்றால் ஆமாம். 4 ஆம் பிரதிவாதி சேகர் 1வது இன தாவா சொத்தின் மாவு அரைக்கும் மில் வைத்துள்ளார் என்றால் ஆமாம். மின்இணைப்பு பெறுவதற்கு அனைத்து உரிமையாளர்களிடம் கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் சரிதான். அந்த மின் இணைப்பு பெறுவதற்கு அனைவரும் கையொப்பம் செய்தோம் என்றால் இல்லை. தொழில் நிறுவனத்திற்கு மும்முனை மின்சாரம் பெறுவதற்கு அனைத்து உரிமையாளர்களும் கையொப்பம் செய்யவேண்டிய தேவையில்லை.

7. பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் தாவா சொத்தின் மாவு மில் வைக்கப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.2-வது இன சொத்து 1986 ம் ஆண்டு வாங்கப்பட்டது என்றால் சரிதான் எனது தகப்பனாரால் வாங்கப்பட்டது. 2-வது இன சொத்து கரந்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவண எண். 1095/1986 என்றால் சரிதான். 2 வது இன சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 21 செண்ட் ஆகும். 2 வது இன சொத்தை தனது தந்தையிடமிருந்து பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணம் பெற்று விற்பனை செய்துள்ளேனா என்றால் ஆமாம். யார் யாரிடம் விற்பனை செய்துள்ளேன் என்றால் முருகானந்தம், வெண்ணிலா இருவரிடமும் 4968 சதுரடி மனையை விற்பனை செய்துள்ளோம்.

8. வெண்ணிலாவிற்கும், முருகானந்தத்திற்கும் தனித்தனியாக எவ்வளவு சரதுடி விற்பனை செய்துள்ளேன் என்றால் வெண்ணிலாவிற்கு 2100 சதுரடியும், முருகானந்தத்திற்கு 2100 சதுரடியும், மீதியுள்ள 768 சதுரடியிடத்தை மேற்படி இருவருக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டேன். 1வது இன சொத்தை வாதியின் தந்தையால் 1967 ம் ஆண்டு வாங்கப்பட்டது என்றால் சரிதான். 1-வது இன சொத்து வாங்கும்போது பழைய கூரை வீடு இருந்ததா என்றால் இல்லை பழைய

ஓட்டு வீடு இருந்தது. எனக்கு வேலை கிடைத்தபிறகு தஞ்சாவூரில் வசித்து வந்தீர்களா என்றால் இல்லை. பழைய வீட்டில் தான் வசித்து வந்தேன். தஞ்சாவூரில் எப்போது குடியேறினேன் என்றால் தஞ்சாவூரில் குடியேறவில்லை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டத்தில் பணி நிமித்தமாக குடியிருந்தேன். தற்போது நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் தஞ்சாவூரில் குடியிருந்து வருகின்றேன். எந்த வருடம் முதல் தஞ்சாவூரில் குடியிருந்து வந்தேன் என்றால் ஞாபகம் இல்லை 25 வருடங்களாக குடியிருந்து வருகிறேன்.

9. 1998 முதல் வசித்து வருகிறேனா என்றால் 2000 வருடத்திலிருந்து குடியிருந்து வந்தேன். வெண்ணிலா, முருகானந்தம் 2 வது இன சொத்தை 1996ம் ஆண்டு விற்பனை செய்த தொகையை கொண்டு தஞ்சாவூரில் வீடு கட்டினேனா என்றால் இல்லை, எனது தந்தையாரின் மருத்துவ செலவிற்கு தனியார் மருத்துவமனையில் வைத்து ஓராண்டு காலம் செலவு செய்து வந்தேன். மருத்துவமனையில் எனது தந்தையாருக்கு செலவு செய்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வீர்களா என்றால் தற்போது என் கை வசம் இல்லை. தந்தையாருக்கு எந்தவிதமான நோயும் கிடையாது நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1–வது இன சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2368 சதுரடி ஆகும்.

10. 2016–ஆம் ஆண்டு பாகபிரிவினை தொடர்பாக ஊர் பஞ்சாயத்தில் வாதியின் புல எண்.59/39 பட்டாவில் அளவுகள் தவறுதலாகவும் அரசு வரைபடத்தில் உள்ள தவறுதலாகவும் உள்ளது சம்மந்தமாக மாற்றி கொடுப்பதாக பஞ்சாயத்தார்கள் பேசப்பட்டதா என்றால் பட்டா தவறுதலாக உள்ளது என்றால் சரிதான், நானும் சேர்ந்து சரி செய்து கொடுப்பதாக சொன்னேன். வாதியின் தாவா சொத்தில் உள்ள அளவுகளையும் வரைபடத்தையும் சரி செய்வதற்காக மாண்புமிகு நீதிமன்றத்தில் அ.வ.எண்.86/2017 உங்களை தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா 3–வது இன சொத்து உங்கள் தாயார் ராமாமிர்தம்மாள் பெயரில் கிரையம் வாங்கிய சொத்தா என்றால் சரிதான். 3–வது இன சொத்தை யாரிடம் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சந்திரசேகரன் என்பவரிடமிருந்து வாங்கப்பட்டது. 3–வது இன சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் பத்திரப்படி 2304 சதுரடி ஆகும். பட்டாப்படி 4368 சதுரடி ஆகும்.

11. 3 வது இன சொத்தின் நான்கெல்லையில் யார் யார் இருக்கிறார்கள் என்றால் வடக்கு மற்றும் மேற்கில் எனது தகப்பனார் இடம் கிழக்கில் தஞ்சாவூர்–

திருவையாறு ரோடு, தெற்கில் வாதியின் இடம். 3-வது இன சொத்தில் அளவுகள் என்ன என்றால் ஞாபகம் இல்லை. 3-வது இன சொத்தை பொறுத்துதான் பி.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் எனது தாயாரால் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் கிரைய ஆவணத்தில் உள்ள அளவைவிட கூடுதலாக எழுதப்பட்டுள்ளது என்றால் எனது தாயாருக்கு வழங்கப்பட்ட பட்டாவில் உள்ள அளவுபடி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது. பத்திரப்படி அல்லாமல் பட்டாப்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டது தவறு என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும்போது கிரைய பத்திரத்தை காட்டவில்லை என்றால் அந்தசமயம் எனது தாயார் வசம் கிரைய பத்திரம் இல்லை வாதி அதை எடுத்துச் சென்றுவிட்டார். செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது தாயார் எழுதி வைத்தாரா அல்லது நானே எழுதிக் கொண்டேனா என்றால் எனது தாயார் தான் எழுதி வைத்தார்.

வாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

S.d/Ramadhas.

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.17 15:48:59 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU